**<u>IN THE COURT OF THE DISTRICT MUNSIF, SENDAMANGALAM.</u>**

**<u>O.S.No.43/2020</u>** **<u>P.W. 1</u>**

Deposition of witness for solemnly affirmed by Tmt.S.Sangeetha,Assistant of this court on 29.07.2026 in accordance with the provision of the Act 1873.

| | |
|---|---|
| Name: | பன்னீர்செல்வம் |
| Father Name: | சடையன் |

**<u>14, 15, 17 பிரதிவாதிகள் தரப்பு குறுக்குவிசாரணை</u>** <u>(Recall of PW1 as per order in IA.No.17/2026 dt:29.07.2026)</u>

இவ்வழக்கு எனது தகப்பனார் உயிருடன் இருக்கும்போது அவரால் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். கூட்டுக்குடும்ப சொத்தில் எனக்கான பாகத்தை கேட்டுதான் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்து யார் பெயரில் உள்ளது என்றால் அங்காயி என்பவரின் பெயரில் உள்ளது. அங்காயி என்பவர் எனது தகப்பனாரின் தாயார் என்றால் சரிதான். எனது பாட்டனார் பெயர் என்னவென்றால் வசந்தன் ஆகும். மேற்படி வசந்தன் பெயரில் உள்ள சொத்தை பொறுத்து இவ்வழக்கு தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி வசந்தன் பெயரில் உள்ள சொத்து எங்கு அமைந்துள்ளது என்றால் தாவா சொத்திற்கு அருகில்தான் உள்ளது. எனது பாட்டனார் பெயரில் உள்ள சொத்தை பொறுத்து வாரிசுகளுக்கிடையே பாகப்பிரிவினை ஏற்பட்டுள்ளதா என்றால் இல்லை வாய்மொழியாக பாகப்பிரிவினை ஏற்பட்டு பட்டா ஏற்பட்டு அவரவர்கள் பாகத்தை அனுபவித்து வருகிறோம்.

யார் யார் பெயரில் பட்டா தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் பெரியசாமி, சடையன், பழனிசாமி ஆகியோர்கள் பெயரில் தனியாக பட்டா உள்ளது. தற்போது பழனிசாமி இறந்துவிட்டார். மேற்படி பழனிசாமி பெயரில் இருந்த பட்டா தற்போது யார் பெயரில் உள்ளது என்றால் பழனிசாமியின் சகோதர, சகோதரிகள் பெயரில் உள்ளது. அங்காயின் வாரிசுகளான 14 முதல் 17 பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள பதிலுரையை படித்துப் பார்த்தேனா என்றால் படித்துப் பார்த்தேன். மேற்படி பதிலுரையில் எனதுபாட்டனார் வசந்தன் பெயரில் உள்ள சொத்துக்கள் இன்னும் பாகப்பிரிவினை ஏற்படவில்லை என்றும் அச்சொத்துக்களை இவ்வழக்கில் சேர்க்கவில்லை என்பதால் இவ்வழக்கு தள்ளுபடியாக வேண்டியது என்று சொல்லியுள்ளார்கள் என்றால்

சொல்லியுள்ளார்கள் ஆனால் அது தவறு. எனது தகப்பனார் சடையனுக்கு வரதராஜன் என்பவர் வாரிசாக உள்ளார் என்றால் சரிதான், வழக்கு தாக்கல் செய்வதற்கு 7 வருடங்களுக்கு முன்பே ஓடிவிட்டார், மேற்படி வரதராஜன் எங்கிருக்கிறார் என்று தெரியாது. இவ்வழக்கில் மேற்படி வரதராஜனை பொறுத்து எதுவும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

மேற்படி வரதராஜனை வழக்கில் தரப்பினராக சேர்க்காத காரணத்தினால் இவ்வழக்கு அவசியத்தரப்பினரை சேர்க்காத தோஷத்தால் தள்ளுபடியாக வேண்டியது என்று சொன்னால் சரியல்ல. எனது தகப்பனார் இவ்வழக்கு சங்கதிகளை பொறுத்து வழக்கறிஞரிடம் சொல்லி தயாரித்தபோது நான் உடனிருந்தேனா என்றால் இல்லை. சின்னக்கன்னு மற்றும் பாப்பாயி ஆகியோர்கள் எனது தகப்பனார் சடையனுக்கு கிரையப்பத்திரம் எழுதிக்கொடுத்த சமயத்தில் நான் உடனிருந்தேனா என்றால் இல்லை. மேற்படியார்கள்தான் கிரையம் எழுதிக் கொடுத்தார்கள் என்று நேரடியாக எனக்கு தெரியாது என்றால் தெரியாது. மேற்படி கிரையப்பத்திரத்தை ரத்து செய்யும் சமயத்தில் நான் உடனிருந்தேனா என்றால் இருந்தேன். கிரையப்பத்திரத்தை ரத்து செய்ய வேண்டி எவ்வளவு நாட்களுக்கு முன்பு சின்னக்கன்னு மற்றும் பாப்பாயி கேட்டுவந்தார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது, ரத்து செய்யும் சமயத்திலும் நான் உடனில்லை, ரத்து செய்ததற்கு பின்னிட்டுதான் எனது தகப்பனார் என்னிடம் சொன்னார். மேற்படி கிரையப்பத்திரத்தை ரத்து செய்தது குறித்து எப்போது எனது தகப்பனார் என்னிடம் சொன்னார் என்றால் ரத்து செய்த தினத்தன்றே என்னிடம் சொன்னார். கிரையப்பத்திரம் ரத்து செய்யும் சமயத்தில் நான் எங்கிருந்தேன் என்றால் குமாரபாளையத்தில் நான் ஆசிரியராக பணியில் இருந்தேன். எனது தகப்பனார் எந்த தேதியில் மேற்படி கிரையப்பத்திரத்தை ரத்து செய்து கொடுத்தார் என்றால் 2012ல் ரத்து செய்து கொடுத்தார். மேற்படி கிரையப்பத்திரம் 03.02.2012 தேதியில் ரத்து செய்யப்பட்டுள்ளது என்றால் தேதி எனக்கு தெரியாது.

என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.8 கிரைய ரத்து பத்திரத்தில் என்ன தேதி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் பிப்ரவரி மாதம் 3ம் தேதி 2012 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி தேதியில் எனது தகப்பனார் எத்தனை பத்திரத்தை ரத்து செய்தார் என்றால் மூன்று பத்திரத்தை ரத்து செய்தார். மேற்படி 3 பத்திரத்தில் ஒரு பத்திரமானது எனது தகப்பனார் எனக்கு எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட்

பத்திரத்தை ரத்து செய்த பத்திரம் என்றால் சரிதான். இன்னொரு பத்திரம் எனது தகப்பனார் எனது சகோதரருக்கு எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரத்தை ரத்து செய்ததற்கான பத்திரம் என்றால் சரிதான். மற்றொரு பத்திரம் 2000ம் ஆண்டில் சின்னக்கன்னு மற்றும் பாப்பாயி எனது தகப்பனாருக்கு எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரத்தை ரத்து செய்ததற்கான பத்திரம் என்றால் சரிதான். எனது தகப்பனார் இவ்வழக்கை எதற்காக தாக்கல் செய்துள்ளார் என்றால் பாகப்பிரிவினை மற்றும் மோசடியாக எனது தகப்பனாரை மிரட்டி மேற்படி 3 ரத்து பத்திரத்திலும் கையெழுத்து வாங்கியுள்ளதால் மேற்படி பத்திரங்கள் செல்லாது என்று வழக்கை தாக்கல் செய்துள்ளார். எனது தகப்பனாரை மிரட்டி கையெழுத்து வாங்கிய விவரம் என்னிடம் யார் சொன்னார்கள் என்றால் எனது தகப்பனார் சொன்னார். எப்போது சொன்னார் என்றால் 03.02.2012ம் தேதியன்று நான் வேலையிலிருந்து வந்த பிறகு இரவு 7மணியளவில் என்னிடம் சொன்னார்.

மேற்படி 3 ரத்து பத்திரங்களையும் எத்தனை மணிக்கு பதிவு செய்துள்ளார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி 03.02.2012 தேதியில் மேற்படி 3 ரத்து பத்திரங்களை தவிர எனது குடும்பத்தை சேர்ந்தவர்கள் வேறு ஏதேனும் பத்திரத்தை பதிவு செய்துள்ளார்களா என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் பத்திரம் யார் யாருக்கிடையே எந்த தேதியில் ஏற்பட்டுள்ளது என்றால் எனக்கும், 2ம் பிரதிவாதியான தமிழ்செல்வனுக்கும் இடையே கடந்த 03.02.2012 தேதியில் தடநடை பாத்திய ஒப்பந்த பத்திரம் ஆகும். மேற்படி பத்திரம் எத்தனை மணிக்கு பதிவாகியுள்ளது என்றால் மதியம் 2to3மணியளவில் ஏற்பட்டுள்ளது. மேற்படி தடநடை பாத்திய ஒப்பந்த பத்திரம் சான்றிட்ட நகல் **பி.சா.ஆ.11** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி 3 ரத்து பத்திரமும், பி.சா.ஆ.11 பத்திரமும் ஒரே தேதியில், ஒரே நேரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். பணியில் இருந்தபோது அனுமதி கேட்டு வந்தேன். எத்தனை மணிக்கு அனுமதி கேட்டு வந்தேன் பின்பு எப்போது பணிக்கு சென்றேன் என்றால் 12 முதல் 4.30 மணிவரை அனுமதி கேட்டிருந்தேன். திரும்ப எனது பணிக்கு எத்தனை மணிக்கு சென்றேன் என்றால் 5 மணிக்கு சென்றேன். சார்பதிவாளர் அலுவலகத்திற்கு எத்தனை மணிக்கு வந்தேன் என்றால் 1 மணியளவில் வந்தேன். அப்போது எனது தகப்பனார் அங்கிருந்தாரா என்றால் இருந்தார். அப்போது எனது தகப்பனார் எதற்கு வந்தார் என்று என்னிடம் சொன்னாரா என்றால் சொல்லவில்லை.

மேற்படி 3 ரத்து பத்திரங்களும் எனது தகப்பனார் மற்றும் எனது குடும்பத்தை சேர்ந்த அனைவரின் சம்மதத்துடன் ஏற்பட்டது என்றால் சரியல்ல. பி.சா.ஆ.11 பத்திரம் ஏற்படுவதற்கு முன்புதான் மேற்படி 3 ரத்து பத்திரங்களும் ஏற்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி 3 ரத்து பத்திரங்களும் நான் படித்துப் பார்த்தேனா என்றால் படித்துப் பார்த்தேன். மேற்படி 3 ரத்து பத்திரங்களில் யார் சாட்சி கையொப்பம் செய்துள்ளார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. சார்பதிவாளார் அலுவலகத்தில் எனது தகப்பனாருடன் யார் யார் இருந்தார்கள் என்றால் எனது சகோதரன் சந்திரன், குமார் என்பவர் சாட்சி கையொப்பம் செய்துள்ளார் ஆனால் அவர் பெயர் சுகுமார் ஆகும். மேற்படி சுகுமாரின் தந்தை பெயர் என்னவென்றால் பெரியசாமி ஆகும். எனது சகோதரன் சந்திரனிடம் எதற்காக சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வந்தீர்கள்என்று கேட்டேனா என்றால் கேட்டதற்கு எனது தகப்பனார் அழைத்ததால் வந்தேன் என்று சொன்னார். அப்போதும் தகப்பனார் எதற்காக அழைத்தார் என்று கேட்டேனா என்றால் கேட்கவில்லை. சார்பதிவாளர் அலுவலகத்தில் இருந்தபோது எனது தகப்பனாரிடம் பேசினேனா என்றால் பேசினேன் ஆனால் எதுவும் சொல்லவில்லை.

தாவா சொத்து முழுவதும் எனது பாட்டி அங்காயின் சொத்து என்றால் சரிதான். மேற்படி அங்காயிக்கு பெரியசாமி, சடையன், பாப்பாயி, நாகம்மாள், சின்னக்கன்னு மற்றும் பழனிசாமி ஆகியோர்கள் சேர்ந்து ஆறுபேர் வாரிசுகள் என்றால் சரிதான். மேற்படி பழனிசாமி வாரிசு இல்லாமல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். எனவே அங்காயி என்பவரின் சொத்தில் மீதமுள்ள 5 வாரிசுகளுக்கும் 1/5 பாகம் என்றால் சரிதான். எனது தகப்பனார் எனக்கும், எனது சகோதரருக்கும் தானசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதிவைக்கும் சமயத்தில் தாவா சொத்தில் பாகம் பிரிக்கப்படவில்லை என்று சொன்னால் சரிதான். பாகம் பிரிக்கப்படாத சொத்தில் எனக்கு எழுதிவைத்த தானசெட்டில்மெண்ட் பத்திரம் செல்லாது என்று சொன்னால் சரியல்ல. அதனால்தான் மேற்படி இரண்டு தானசெட்டில்மெண்ட் பத்திரத்தையும் எனது தகப்பனார் ரத்து செய்தார் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி மூன்று ரத்துப்பத்திரங்கள் எழுதப்படும் வரையில் மேற்படி செட்டில்மெண்ட் பத்திரங்களில் குறிப்பிட்டுள்ள சொத்தை பொறுத்து எங்களது பெயரில் தனிபட்டா இல்லை என்று சொன்னால் சரிதான்.

மேற்படி இரண்டு செட்டில்மெண்ட் பத்திரங்கள் மற்றும் ஒரு கிரையபத்திரம் அமலுக்கு வரவில்லை என்று சொன்னால் சரிதான். அதனால்தான் மேற்படி 3 பத்திரங்களும் ரத்து செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எனவே மூன்று ரத்து பத்திரங்களை பொறுத்து நான் விளம்புகை பரிகாரம் கேட்டுள்ளது கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் 14 முதல் 17 பிரதிவாதிகளுக்கு 1/5 பங்கு உள்ளதை நான் மறுக்க முடியாது என்று சொன்னால் சரியல்ல. எனவே விளம்புகை பரிகாரத்தை பொறுத்து இவ்வழக்கு தள்ளுபடியாகக்கூடியது என்று சொன்னால் சரியல்ல. அதேபோல் இவ்வழக்கில் கோரியுள்ள பங்கு விகிதாச்சாரம் தவறு என்பதால் இவ்வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. 14 முதல் 17 பிரதிவாதிகளின் பாகத்தை மறைத்து வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் இவ்வழக்கு தள்ளுபடியாகக்கூடியது என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை -இல்லை.**

**Sd/-E.Ridhula** **Sd/-Paneerselvam(PW1)**

**DM,SDM.**